9 ஒன்றுகளையும் 7 ஒன்றுகளையும் சேர்த்தால் 16 ஒன்றுகள் ஆகும். அதில் 1 பத்தும் 6 ஒன்றுகளும் உண்டு. ஆகவே விடையில் 1-வது ஸ்தானத்தில் 6 ஒன்றுகள் என்பதைக் குறிக்க 6 போடப்பட்டிருக்கிறது. 10-வது ஸ்தானத்தில் 3 பத்துகள் 4 பத்துகள் ஆக 7 பத்துகள் இருக்கின்றன. அதோடு முந்தின ஒரு பத்தையும் சேர்த்தால் 8 பத்துக்களாகும். ஆகவே விடையில் 10-வது ஸ்தானத்தில் 8 பத்துகள் என்பதைக் குறிக்க 8 போடப்பட்டிருக்கிறது.

அப்பியாசம் 4

1. என்னிடம் ரூ. 40 இருக்கிறது. என் அப்பா எனக்கு ரூ. 50 கொடுத்தார். இப்பொழுது மொத்தம் என்னிடம் இருக்கும் ரூபாய் எவ்வளவு ?

2. ஒரு வியாபாரி 46 பருப்பு மூட்டைகளும், 24 உப்பு மூட்டைகளும் வரவழைத்தான். அவன் வரவழைத்த மூட்டைகள் எத்தனை ?

3. ஒரு பையில் 48 நாணயங்களும், மற்றோர் பையில் 36 நாணயங்களும் இருந்தால் 2 பைகளிலு முள்ள மொத்த நாணயங்கள் எவ்வளவு ?

4. ஒரு பையன் இங்கிலீஷில் 40 மார்க்கும், கணக்கில் 25 மார்க்கும், தமிழில் 34 மார்க்கும் வாங்கினால் அவன் 3 பாடங்களிலும் வாங்கிய மொத்த மார்க்குகள் எத்தனை ?

5. ஒருவன் 26 இங்கிலீஷ் புத்தகங்களும், 37 கணக்குப் புத்தகங்களும், 18 பூகோள புத்தகங்களும், 18 சரித்திரப் புத்தகங்களும் வரவழைத்தான். அவன் வரவழைத்த புத்தகங்கள் எத்தனை ?

6. ஒரு இடையன் ஒன்று ரூ. 24 விலையுள்ள 4 பசுக்கள் வாங்கினான். அவன் கொடுக்க வேண்டிய ரூபாய் எவ்வளவு ?

7. ஒருவனுக்கு மாதச் சம்பளம் ரூ. 19. 4 மாதச் சம்பளம் எவ்வளவு ரூபாய் ஆகும் ?

8. ஒரு மேஜை விலை ரூ. 24. ஒரு நாற்காலி விலை ரூ. 12. ஒரு பீரோ விலை ரூ. 31 ஒரு பெஞ்சு விலை 19 ரூ. இவைகளின் மொத்த விலை என்ன ?

9. ஒரு கலியாணத்திற்கு 30 புருஷர்களும், 25 ஸ்திரீகளும், 17 குழந்தைகளும் வந்திருந்தார்கள். மொத்தம் வந்திருந்தவர்கள் எத்தனை பேர் ?

10. ஒரு கூடையில் 24 வாழைப் பழங்களும், 25 ஆரஞ்சு பழங்களும், 30 ஆப்பிள் பழங்களும்,

12 மாம்பழங்களும் இருந்தால் கூடையிலிருக்கும் மொத்தம் பழங்கள் எத்தனை ?

அப்பியாசம் 5

பின்வருவனவற்றிற்கு விடை கண்டுபிடி.

1. $26+35$	6. $36+34$
2. $40+50$	7. $44+39$
3. $75+16$	8. $25+46$
4. $48+33$	9. $33+48$
5. $25+66$	10. $43+19$

அப்பியாசம் 6

கூட்டி விடை கண்டுபிடி.

1.	2.	3.	4.	5.
46	24	47	72	75
37	27	35	18	17

6.	7.	8.	9.	10.
36	28	29	45	75
39	29	39	48	16

11.	12.	13.	14.	15.
45	23	16	75	25
16	24	17	10	10
23	35	24	9	29
30	16	13	3	19

கழித்தல்

மாதிரி 1. என்னிடம் 96 ரூபாய் இருந்தது. அதில் 45 ரூபாய்க்கு 1 கடியாரம் வாங்கினேன். மீதி என்னிடம் இருக்கும் பணம் எவ்வளவு?

	ப	ஒ	
என்னிடமிருந்த ரூபாய்	9	6	
கடியாரம் விலை ரூபாய்	4	5	
மீதியுள்ள ரூபாய்	5	1	விடை

அப்பியாசம் 7

1. என்னிடம் 95 ரூபாய் இருந்தது. அதில் நான் 64 ரூபாய்க்கு 1 சைகிள் வாங்கினேன். என்னிடம் மீதி எவ்வளவு பணம் இருக்கும்?

2. ஒரு பழக் கூடையில் 86 பழங்கள் இருந்தன. அதில் 54 பழங்கள் விற்கப்பட்டன. கூடையில் மீதியுள்ள பழங்கள் எத்தனை?

3. ஒரு பள்ளிக்கூடத்தில் 75 பிள்ளைகள் இருந்தார்கள். அதில் 32 பிள்ளைகள் வேறு பள்ளிக்கூடம் சென்றார்கள். இப்பொழுது பள்ளிக்கூடத்திலுள்ள மீதிப் பிள்ளைகள் எத்தனை?

4. ஒரு கூட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக 84 பேர் இருக்கிறார்கள். அதில் ஆண்கள் 51 பேர். ஆனால் பெண்கள் எத்தனை பேர்?

5. ஒரு கிழவன் வயது 76. அவன் மகன் வயது 45. மகனைக் காட்டிலும் கிழவன் எவ்வளவு வயது பெரியவன்?

6. என்னிடம் 42 மணிகள் உள்ளன. இதோடு எத்தனை மணிகள் சேர்த்தால் மொத்தம் 96 மணிகள் ஆகும்?

7. 87 கெஜம் துணி இருந்தால் 1 திரை தைக்கலாம். என்னிடம் 35 கெஜம் துணி இருக்கிறது. இன்னும் எத்தனை கெஜம் வாங்க வேண்டும்?

8. ஒரு தொட்டி 77 குடம் தண்ணீர் பிடிக்கும். அதில் 45 குடம் தண்ணீர் இருக்கிறது. அதை நிரப்ப இன்னும் எத்தனை குடம் தண்ணீர் கொட்ட வேண்டும்?

அப்பியாசம் 8

விடை கண்டு பிடி.

(1) 76—45	(3) 69—37	(5) 98—27
(2) 95—32	(4) 87—46	(6) 67—26
(7) 49—26	(8) 86—35	

அப்பியாசம் 9

கழித்து விடை எழுது.

(1) 86	(2) 95	(3) 97	(4) 85	(5) 78
33	44	26	34	37
—	—	—	—	—
—	—	—	—	—
(6) 88	(7) 95	(8) 84	(9) 89	(10) 95
37	33	32	48	54
—	—	—	—	—
—	—	—	—	—

மாதிரி 2. ஒருவன் வயது 70. அவன் மகன் வயது 40. மகனைக்காட்டிலும் தகப்பன் எவ்வளவு மூத்தவன்?

தகப்பன் வயது	70
மகன் வயது	40
	—
தகப்பனின் அதிக வயது	30
	—

இரண்டு எண்களிலும் 1-வது ஸ்தானத்தில் 0 இருப்பதால் அவைகளில் 1 கள் இல்லை என்பது தெரியும். ஆகவே விடையிலும் 1 கள் இல்லை என்பதைக் குறிக்க 0 போட்டிருக்கிறது. பத்தாவது ஸ்தானத்திலுள்ள 7 பத்துகளிலிருந்து 4 பத்துகள் எடுத்தால் மீதி 3 பத்துகள் என்பதைக் குறிக்க 3 போடப்பட்டிருக்கிறது.

மாதிரி 3. ஒரு சைக்கிள் விலை ரூ. 60. என்னிடம் ரூ. 36 இருக்கிறது. அதை வாங்க எனக்கு இன்னும் எவ்வளவு ரூபாய் வேண்டும்?

சைக்கிள் விலை	ரூ.	60
என்னிடம் உள்ளது	ரூ.	36
		—
இன்னும் வேண்டிய	ரூ.	24
விடை		—

இங்கு 6 பத்துக்களிலிருந்து 3 பத்துக்களையும் 6 ஒன்றுகளையும் எடுக்க வேண்டும். மேல் எண்ணில் தனித்த ஒன்றுகள் இல்லாததால் 10 உள்ள கூட்டிலிருந்து 1 கூட்டு எடுத்துக்கொள். அதில் பத்து 1 கள் உண்டு. அதிலிருந்து ஆறு 1 களை எடுத்தால் மீதி நான்கு ஒன்றுகள். ஆகவே விடையில் 1-வது ஸ்தானத்தில் 4 போடப்பட்

டிருக்கிறது. மேல் எண்ணில் இன்னும் 5 பத்துகள் இருக்கின்றன. அதில் 3 பத்துகள் எடுத்தபின் 2 பத்துகள் இருக்கும். ஆகவே விடையில் 10-வது ஸ்தானத்தில் 2 போடப்பட்டிருக்கிறது.

மாதிரி 4. 72-லிருந்து 34 ஐ கழித்து விடை கொடு.

இங்கு 7 பத்துகள் 2 ஒன்றுகளிலிருந்து மூன்று பத்துகள் 4 ஒன்றுகளை எடுக்க வேண்டும். மேல் எண்ணில் 2 ஒன்றுகள்தான் இருக்கின்றன. ஆகவே 10 உள்ள கூட்டிலிருந்து 1 கூட்டு எடுத்துக்கொள். அதில் 10 ஒன்றுகள் உண்டு. அதோடு 2 ஒன்றுகளையும் சேர்த்தால் 12 ஒன்றுகள் ஆகும். 12 ஒன்றுகளிலிருந்து 4 ஒன்றுகளை எடுத்தபின் 8 ஒன்றுகள் மீதி. ஆகவே விடையில் 1-வது ஸ்தானத்தில் 8 போடப்பட்டிருக்கிறது. மேல் எண்ணில் இன்னும் 6 பத்துகள் இருக்கின்றன. அதில் 3 பத்துகளை எடுத்தபின் மீதி 3 பத்துகள் உண்டு. ஆகவே விடையில் 10-வது ஸ்தானத்தில் 3 போடப்பட்டிருக்கிறது.

```
72
34
—
38
—
```

அப்பியாசம் 10

1. ஒரு குவியலில் 80 கற்கள் உள்ளன. அதில் 50 கற்கள் வெள்ளை நிறமும், மீதி சிவப்பு நிறமுமாய் இருக்கின்றன. சிவப்புக் கற்கள் எத்தனை?

2. ஒருவரின் மாதச்சம்பளம் ரூ. 90 அவருடைய மாதச் செலவு ரூ. 64. அவர் மாதம் மீத்துவைப்பது எவ்வளவு?

3. ஒரு கயிறு 75 கெஜம் நீளம் உள்ளது. அதில் 48 கெஜம் வெட்டியெடுத்தபின் மீதி எத்தனை கெஜம் இருக்கும் ?

4. 84 மாம்பழங்கள் வருவித்ததில் 26 பழங்கள் அழுகிவிட்டன. நல்ல பழங்கள் எத்தனை ?

5. 63 படி அரிசி வாங்கியதில் 36 படி செலவழிந்துவிட்டது. மீதியுள்ள அரிசி எத்தனை படி ?

6. ஒரு பையிலுள்ள ரூபாயோடு 45 ரூபாய் சேர்த்தால் மொத்தம் 82 ரூபாய் ஆகும். பையிலிருக்கும் ரூபாய் எவ்வளவு ?

7. என்னிடமுள்ள பணத்தோடு இன்னும் 35 ரூபாய் சேர்த்தால் 72 ரூபாய்க்கு ஒரு மாடு வாங்கலாம். என்னிடமுள்ள பணம் எவ்வளவு ?

8. ஒரு கூடையில் 59 பழங்கள் உள்ளன. அதோடு இன்னும் சில பழங்களைச் சேர்த்தபின் மொத்தம் 95 பழங்கள் ஆயிற்று. புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பழங்கள் எத்தனை ?

அப்பியாசம் 11

விடை கண்டுபிடி :—

1. 70 – 40
2. 80 – 38
3. 67 – 38
4. 76 – 37

5. 58 – 39
6. 95 – 86
7. 67 – 49
8. 72 – 34
9. 94 – 75
10. 77 – 58

அப்பியாசம் 12

கழித்து விடை எழுது:—

1.	2.	3.	4.	5.
65	38	84	74	65
49	19	37	35	49

6.	7.	8.	9.	10.
66	84	75	84	74
48	49	66	39	45

அத்தியாயம் 4

[10, 5, 2 இவைகளின் பெருக்கல் வாய்ப்பாடு உண்டாக்கல்]

பத்தாம் வாய்ப்பாடு தயாரித்தல்.

சாதனங்கள் :—முத்துக்கள், குச்சிகள்

1. 10, 20 என்று ஆரம்பித்து 10-களாக 100 வரை எண்ணு.

2. 100-லிருந்து பத்துப்பத்தாக இறக்கி எண்ணு.

3. கீழ்வரும் பத்துக்களை கூட்டி, தொகையை வாசி.

10										= 1 பத்து = 10
10	10									= 2 பத்து = 20
10	10	10								= 3 பத்து = 30
10	10	10	10							= 4 பத்து = 40
10	10	10	10	10						= 5 பத்து = 50
10	10	10	10	10	10					= 6 பத்து = 60
10	10	10	10	10	10	10				= 7 பத்து = 70
10	10	10	10	10	10	10	10			= 8 பத்து = 80
10	10	10	10	10	10	10	10	10		= 9 பத்து = 90
10	10	10	10	10	10	10	10	10	10	= 10 பத்து = 100

1 பத்து = 10	$1 \times 10 = 10$
2 பத்து = 20	$2 \times 10 = 20$
3 பத்து = 30	$3 \times 10 = 30$
4 பத்து = 40	$4 \times 10 = 40$
5 பத்து = 50	$5 \times 10 = 50$
6 பத்து = 60	$6 \times 10 = 60$
7 பத்து = 70	$7 \times 10 = 70$
8 பத்து = 80	$8 \times 10 = 80$
9 பத்து = 90	$9 \times 10 = 90$
10 பத்து = 100	$10 \times 10 = 100$

[குறிப்பு :— × இது பெருக்கல் அடையாளம். 2×10 என்றால் 10-ஐ 2 தடவை எழுதிக் கூட்டப்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.]

ஐந்தாம் வாய்ப்பாடு தயாரித்தல்

சாதனங்கள் : முத்துக்கள், குச்சிகள்.

1. 5, 10, 15 என்று ஆரம்பித்து 5-களாக 50 வரையில் எண்ணு.

2. 50, 45, 40 என்று ஆரம்பித்து 5-களாக இறக்கிச் சொல்லு.

கீழ்வரும் கணக்குகளில் எண்களைக் கூட்டி தொகையை எழுது. பிறகு கூட்டாமல் சொல்லு.

5										= 1 ஐந்து = 5
5	5									= 2 ஐந்து = 10
5	5	5								= 3 ஐந்து = 15
5	5	5	5							= 4 ஐந்து = 20
5	5	5	5	5						= 5 ஐந்து = 25
5	5	5	5	5	5					= 6 ஐந்து = 30
5	5	5	5	5	5	5				= 7 ஐந்து = 35
5	5	5	5	5	5	5	5			= 8 ஐந்து = 40
5	5	5	5	5	5	5	5	5		= 9 ஐந்து = 45
5	5	5	5	5	5	5	5	5	5	= 10 ஐந்து = 50

1 ஐந்து 5	$1 \times 5 = 5$
2 ஐந்து 10	$2 \times 5 = 10$
3 ஐந்து 15	$3 \times 5 = 15$
4 ஐந்து 20	$4 \times 5 = 20$
5 ஐந்து 25	$5 \times 5 = 25$
6 ஐந்து 30	$6 \times 5 = 30$
7 ஐந்து 35	$7 \times 5 = 35$
8 ஐந்து 40	$8 \times 5 = 40$
9 ஐந்து 45	$9 \times 5 = 45$
10 ஐந்து 50	$10 \times 5 = 50$

இரண்டாம் வாய்ப்பாடு தயாரித்தல்

சாதனங்கள் :—முத்துக்கள், குச்சிகள்.

2-லிருந்து ஆரம்பித்து இரண்டிரண்டாக 20 வரை ஏற்றிச் சொல்.

20-லிருந்து இரண்டிரண்டாக இறக்கிச் சொல்லு.

கீழ் வருபவைகளைக் கூட்டி விடை எழுது :

அப்பியாசம் 1

1. ஒரு பையனுக்கு ரூ. 2 சம்பளம். 9 பையன்களுக்குச் சம்பளம் என்ன ?

2. ஒரு சட்டைக்கு வேண்டியது 2 கெஜம் துணி. 7 சட்டைகளுக்கு எத்தனை கெஜம் துணி தேவை ?

2										= 1 இரண்டு = 2
2	2									= 2 இரண்டு = 4
2	2	2								= 3 இரண்டு = 6
2	2	2	2							= 4 இரண்டு = 8
2	2	2	2	2						= 5 இரண்டு = 10
2	2	2	2	2	2					= 6 இரண்டு = 12
2	2	2	2	2	2	2				= 7 இரண்டு = 14
2	2	2	2	2	2	2	2			= 8 இரண்டு = 16
2	2	2	2	2	2	2	2	2		= 9 இரண்டு = 18
2	2	2	2	2	2	2	2	2	2	= 10 இரண்டு = 20

1 இரண்டு = 2	$1 \times 2 = 2$
2 இரண்டு = 4	$2 \times 2 = 4$
3 இரண்டு = 6	$3 \times 2 - 6$
4 இரண்டு = 8	$4 \times 2 = 8$
5 இரண்டு = 10	$5 \times 2 = 10$
6 இரண்டு = 12	$6 \times 2 = 12$
7 இரண்டு = 14	$7 \times 2 = 14$
8 இரண்டு = 16	$8 \times 2 = 16$
9 இரண்டு = 18	$9 \times 2 = 18$
10 இரண்டு = 20	$10 \times 2 = 20$

3. ஒன்று 2 ரூபாய் வீதம் 5 கோழிகளும், ஒன்று 6 ரூ. வீதம் 5 ஆடுகளும் வாங்க எவ்வளவு ரூபாய் வேண்டும்?

4. என்னிடம் 8 ஐந்து ரூபாய் நோட்டுகள் இருக்கின்றன. அதை ரூபாய்களாக மாற்றினால் எத்தனை ரூபாய்கள் இருக்கும்?

5. ஒரு கூடையிலுள்ள பழங்களை பேருக்கு 5 பழங்கள் வீதம் 6 பேருக்குக் கொடுக்கலாம். கூடையிலுள்ள பழங்கள் எத்தனை?

6. ஒரு கட்டிலுக்கு 4 கால்கள். 5 கட்டில்களுக்குக் கால்கள் எத்தனை?

7. ஒரு வாரத்திற்கு 7 நாட்கள். 5 வாரத்திற்கு நாட்கள் எத்தனை?

8. சிப்பு ஒன்றுக்கு 10 பழங்கள் வீதம் 8 சிப்புக் களில் எத்தனை பழங்கள் இருக்கும்?

9. ஒரு குழந்தைக்கு 10 மிட்டாய் வீதம் 6 குழந் தைகளுக்குக் கொடுக்க எத்தனை மிட்டாய்கள் வேண்டும்?

அத்தியாயம் 5

பின்னம்

ஒரு பொருளின் அரைப்பாகம், கால்பாகம்

அரை—$\frac{1}{2}$—பாதி



ஒரு சமசதுரக் காகிதத்தை எடுத்துக்கொள். மேலே படத்தில் காட்டியிருப்பதுபோல் அதை இரண்டு சம பாகங்களாக மடித்துக் கத்தரி. கத்தரித்த துண்டுகள் ஒன்றுக்கொன்று சமம் என்பதை ஒன்றின்மேல் ஒன் ருக வைத்துப் பார். இப்போது ஒவ்வொரு துண்டும் முழுச் சதுரக் காகிதத்தில் எத்தனையில் ஒரு பங்கு? ஒரு சதுரக் காகிதத்தை இரண்டு சமபாகங்கள் செய்தபடி யால், ஒவ்வொரு பாகமும் இரண்டில் ஒரு பங்காகும். ஒவ்வொரு பாகத்திற்கும் பாதி அல்லது அரை என்று பெயர். இரண்டில் ஒன்றென்பதை 2-ல் 1 என்று

எழுதலாமல்லவா ? ஆதலால், அரை அல்லது பாதி என்பதை $\frac{1}{2}$ என்று எழுதுவது வழக்கம். இதுவே அதன் பின்ன ருபமாகும்.

ஆகவே ஒரு பின்னத்தைக் குறிப்பிட 2 எண்களும் ஒரு கோடும் தேவை. கோட்டிற்கு மேலும் கீழும் எண் களிருப்பதைக் கவனி. கோட்டிற்குக் கீழேயுள்ள எண் ஒரு பொருளை எத்தனை சமபாகங்களாகச் செய்யப்பட் டிருக்கிறதென்பதையும், கோட்டிற்கு மேலுள்ள எண் அவ்வாறு செய்யப்பட்ட பாகங்களில் எத்தனை பாகங் கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் குறிக்கும்.



அரையும் அரையும் ஒன்று

$$\frac{1}{2} + \frac{1}{2} = 1$$

மனக்கணக்கு

1. காலையில் $\frac{1}{2}$ படி பாலும், மாலையில் $\frac{1}{2}$ படி பாலும் வாங்கினல், மொத்தம் பால் எவ்வளவு ?

2. $\frac{1}{2}$ அணுவுக்கு பழமும், $\frac{1}{2}$ அணுவுக்கு வெற்றிலையும் வாங்கினல், மொத்தம் செலவு எவ்வளவு ?

3. 1 அடி = 12 அங்குலம். $\frac{1}{2}$ அடி எத்தனை அங்குலம் ?

4. $\frac{1}{2}$ படி பாலில் $\frac{1}{2}$ படி தண்ணீரைச் சேர்த்தால் மொத்தம் பால் எவ்வளவு ?

5. அண்ணன் தம்பி இருவருக்கும் ஒரு ரூபாயைச் சமமாய்ப் பங்கிட்டால், ஆளுக்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கும்?

6. ஒரு பென்சில் $\frac{1}{2}$ அணு. 2 பென்சில் விலை என்ன?

7. ஒரு படி நெய்யில் பாதி செலவழிந்த பிறகு மீதி எவ்வளவு நெய் இருக்கும்?

8. கடைக்கு 1 அணு கொண்டுபோய் $\frac{1}{2}$ அணுவுக்குப் பம்பரம் வாங்கினேன். என்னிடம் மீதிப் பணம் எவ்வளவு?

கால் — $\frac{1}{4}$



காலும் காலும் அரை

$\frac{1}{4} + \frac{1}{4} = \frac{1}{2}$

முன் மாதிரி ஒரு சதுரக் காகிதத்தை இரு சம துண்டுகளாகச் செய். ஒவ்வொரு துண்டும் சதுரத்தில் பாதியென்று உங்களுக்குத் தெரியும். இவற்றில் ஒன்றை மறுபடியும் இரண்டு சம பாகங்களாகக் கத்தரி. இப்போதுள்ள இரண்டு துண்டுகளில் ஒவ்வொன்றும் அரையில் பாதியல்லவா?

இம்மாதிரி மற்றப் பாதியையும் கத்தரித்தால், மொத்தம் 4 துண்டுகளாகும். ஒவ்வொரு துண்டும் முழுச் சதுரத்தில் நான்கில் ஒரு பாகமாகும். நான்கில் ஒரு பாகம் கால் எனப்படும். 2-ல் 1ஐ $\frac{1}{2}$ என்று எழுதியது போல், 4-ல் 1ஐ $\frac{1}{4}$ என்று எழுதவேண்டும்.



மேலே படத்தில் காட்டியபடி ஒரு வட்டக் காகிதத்தை மடித்து $\frac{1}{2}$, $\frac{1}{4}$ பாகங்களை வர்ணமிட்டும், கத்தரித்தும் காட்டு.

மனக்கணக்கு

1. அரையில் பாதி எவ்வளவு ?
2. அரை ரூபாயில் பாதி எவ்வளவு?
3. அரையணாவில் பாதி எவ்வளவு?

அப்பியாசம் 1.

1. $\frac{1}{4}$ படி பருப்புடன், $\frac{1}{4}$ படி பருப்பைச் சேர்த்தால் பருப்பு மொத்தம் எவ்வளவு?

2. நான் $\frac{1}{4}$ அணுவுக்கு மிட்டாயும், $\frac{1}{4}$ அணுவுக்குக் குச்சியும் வாங்கினால், மொத்தம் என்ன செலவு?

3. $\frac{1}{4}$ அணு காகிதம், $\frac{1}{4}$ அணு பென்சில், $\frac{1}{4}$ அணு மையுருண்டை, $\frac{1}{4}$ அணு ரப்பர் இவைகள் வாங்க மொத்தம் எவ்வளவு பணம் தேவை?

4. 1 பென்சில் $\frac{1}{4}$ அணுவாக 4 பென்சில்கள் விலை என்ன?

அப்பியாசம் 2

1. $\frac{1}{2}$ படி அரிசியில் $\frac{1}{4}$ படி அரிசி சமையல் செய்த பின், மீதி அரிசி எவ்வளவு?

2. ஒரு டின்னிலுள்ள $\frac{1}{2}$ படி எண்ணெயில் $\frac{1}{4}$ படி கொட்டிவிட்டால், மீதியிருக்கும் எண்ணெய் எவ்வளவு?

3. நான் கடைக்கு $\frac{1}{2}$ அணு கொண்டுபோய் $\frac{1}{4}$ அணுவுக்குப் பொட்டுக்கடலை வாங்கினேன். இப்பொழுது என்னிடமிருப்பது எவ்வளவு?

4. $\frac{1}{2}$ கெஜம் சீட்டித் துணியை இரண்டு பேருக்குச் சமமாகப் பங்கிட்டால், ஆளுக்கு எவ்வளவு வரும்?

5. என்னிடம் $\frac{1}{2}$ ரூபாயும், உன்னிடம் $\frac{1}{4}$ ரூபாயுமிருந்தால், என்னிடமுள்ள அதிகப்பணம் எவ்வளவு?

6. ஒரு ஸ்டாம்பு $\frac{1}{4}$ அணு. 1 அணுவுக்கு எத்தனை ஸ்டாம்புகள் வாங்கலாம்?

பயிற்சி

1. ஒரு நீண்ட சதுரக் காகிதத்தை இரண்டு சம பாகங்களாக மடி. அதில் $\frac{1}{2}$ (அரை) பாகத்தை வர்ணமிட்டுக் காட்டு.

2. ஒரு சோப்பை எடுத்துக்கொள். நூலைக் கொண்டு அதை இரண்டு சரிபாதித் துண்டுகளாக்கு.

3. ஒரு சதுரக் காகிதத்தை எடுத்துக்கொள். அதில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$ பாகங்களைக் கத்தரித்து எடு.

4. 1 நூல் பட்டையிலிருந்து 1 அடி நீளமுள்ள நூலை நறுக்கி எடு. அதை 4 பேர்களுக்குச் சமமாய் நீ எவ்வாறு பங்கிட்டுக்கொடுப்பாய் ?

5. ஒரே நீண்ட சதுரக் காகிதத்தில் பின்வரும் பின்னங்களை வர்ணமிட்டுக் காட்டு:—

$\frac{1}{2}$, $\frac{1}{4}$

6. இது ஒரு தலை. இதில் போட்டிருக்கும் பின்னத்தை எழுது. இம்மாதிரி 2 தலைகள் வாங்க எவ்வளவு பணம் வேண்டும் ?

அத்தியாயம் 6

நீட்டலளவை

பிள்ளைகளே, "எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்று சொல்லுவதைக் கேட்டிருப்பீர்கள். ஒருவன் உயரம் அவன் கையால் 8 சாண்களிருக்கும் என்று சொல்லுவது வழக்கம். நம் வீடுகளில் ஜன்னல், கதவுகளைச் சாதாரணமாய்ச் சாணால் அளக்கிறோம். ஒரு அறை அல்லது தாழ்வாரத்தின் நீள அகலத்தை அளக்க நமது காலடியை உபயோகிக்கிறோம். வேஷ்டி,

சேலைகளைக் கை முழத்தால் அளக்கிறோம். ஒட்டை என்று மற்றொரு அளவும் வழங்கி வருகிறது.

இந்த அளவுகள் ஆளுக்கு ஆள் வித்தியாசப்படுவதால், சர்கார் சில பொதுவான அளவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவை கெஜம், அடி, அங்குலமெனப் படும்.

அடிக்கோல்

இந்த அளவு கோல் 12 சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் 1 அங்குலமெனப்படும்.

12 அங்குலம் = 1 அடி
6 அங்குலம் = $\frac{1}{2}$ அடி
3 அங்குலம் = $\frac{1}{4}$ அடி

அப்பியாசம் 1

1. ஒரு அடிக்கோல் எத்தனை சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது? ஒவ்வொரு பாகத்திற்கும் என்ன பெயர்?

2. அரையடிக்கு எத்தனை அங்குலம்?

3. 3 அங்குலம் எத்தனை அடி ?

4. ஒரு குச்சியை இரண்டு துண்டுகள் செய்தேன். ஒன்றின் நீளம் 4 அங். மற்றொன்றின் நீளம் 3 அங். முழுக்குச்சியின் நீளம் என்ன ?

4. ஒரு பென்சிலின் நீளம் 5 அங். அதில் 2 அங். நீளத்தில் ஒரு துண்டு ஒடித்தால், மீதமிருக்கும் துண்டின் நீளமென்ன ?

6. ஒரு படத்தின் நீளம் 10 அங். அகலம் 6 அங். நீளம் அகலத்தைவிட எத்தனை அங். அதிகம்?

7. ஒரு குச்சியின் நீளம் 3 அங். மற்றொன்றின் நீளம் 2 அங். மூன்றாவதின் நீளம் 5 அங். இம் மூன்று குச்சிகளின் மொத்த நீளமென்ன ?

8. ஒரு பூகோள நோட்டின் நீளம் 8 அங். அகலம் 6 அங். அகலம் நீளத்தைவிட எத்தனை அங்குலம் குறைவு ?

9. ஒரு சோப்புப் பெட்டியின் நீளம் 8 அங். அகலம் 4 அங். உயரம் 2 அங்.

நீளம் அகலத்தைவிட எவ்வளவு அதிகம் ?

உயரம் அகலத்தைவிட எவ்வளவு குறைவு?

நீளம் உயரத்தைவிட எவ்வளவு அதிகம் ?

முன் பாடத்தில் நீளம் குறைந்த பொருள்களை அளக்க அடிக்கோலை உபயோகித்தீர்கள். இப்பொழுது அறை, தோட்டம் முதலியவைகளை அளக்க அடிக்கோலை உபயோகித்தால் அதிக நேரமும், சிரமமும் ஏற்படு மல்லவா ? ஆதலால் இதற்கும் நீளமான ஒரு அளவுகோல் தேவை. இது கெஜக்கோல் எனப்படும்.

3 அடி நீளமுள்ள குச்சி கெஜக்கோல் எனப்படும்.

12 அங்குலம் = 1 அடி	
	3 அடி = 1 கெஜம்

$1\frac{1}{2}$ அடி = 1 முழம்	
	2 முழம் = ஒரு கெஜம்

மனக் கணக்கு

1. எத்தனை அடி 1 கெஜம் ?
2. 1 கெஜம் எத்தனை அங்குலம் ?
3. எத்தனை முழம் 1 கெஜம் ?
4. ஒரு முழம் எத்தனை அடி ?
5. ஒரு முழத்திற்கு அங்குலம் எத்தனை ?
6. ஒரு விளையாட்டில் பாபு 2 கெஜ நீளமும், சீமா 5 அடி நீளமும் தாண்டினார்கள். அதிக நீளம் தாண்டியது யார் ? எவ்வளவு அதிகம் ?

பயிற்சி

1. அடிக்கோலின் அளவுக்குச் சமமாக ஒரு குச்சி எடு.

2. உன் பென்சிலின் நீளத்தை அளந்து எழுது.

3. 3 அங். 5 அங். நீளத்தில் குச்சிகள் ஒடி.

4. உன் சிலேட்டின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து எழுது. எது அதிக நீளம்? எவ்வளவு அதிகம் ?

5. கீழே கண்ட கோடுகளை அளந்து, எத்தனை அங்குலம் என்று எழுது. எந்தக் கோடு அதிக நீளம்? எது அதிகக் குட்டை ?



6. கீழே கண்டிருக்கும் பொருள்களின் நீள அகலங்களை அளந்து எழுது.

பொருளின் பெயர்	நீளம்	அகலம்
மேஜை		
கரும்பலகை		

7. உன் நோட்டுப் புஸ்தகத்தின் நீள அகலங்களை உத்தேசமாகச் சொல்லு. பிறகு அடிக் கோலால் அளந்துபார். இரண்டிற்கு முள்ள வித்தியாசத்தை எழுது.

8. 12 தீப்பெட்டிகளை ஒரு வரிசையில் அடுக்கி வை. அதன் நீளத்தை அளந்து எழுது. அவைகளை ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கு. இப்பொழுது அதன் உயர மென்ன ?

9. உன் வகுப்பில் ஏதேனும் நான்கு பையன்களின் உயரங்களை அளந்து எழுது.

10. ஒரு நூல் பட்டையிலிருந்து 1 கெஜ நீளம் நூல் நறுக்கி எடு. அதை நோட்டுகள் தைப்பதற்கு 10 அங்குலத்தில் 2 துண்டு நூல்களும், 9 அங்குலத்தில் ஒரு துண்டும் கத்தரி. மீதி நூலின் நீளத்தை அளந்து எழுது.

11. உன் வகுப்பின் அறையின் நீளம், அகலம் ஆகிய இவைகளை அளந்து கெஜத்தில் சொல்லு.

அத்தியாயம் 7

முகத்தலளவை

[படி, அரைப்படி, கால்படி]

பிள்ளைகளே, நாம் வீடுகளில் பால், தயிர், நெய், அரிசி, பருப்பு, முதலிய இவைகளை வாங்கும் பொழுது முகந்து அளந்து வாங்குகிறோமல்லவா ? முகந்து

அளப்பதற்கு முகத்தலளவை என்று பெயர்.



இந்த மூன்று அளவு படிகளையும் பார். முதல் அளவு 1 படி யென்றும், இரண்டாது அளவு அரைப் படி அல்லது உரி யென்றும், மூன்றுவது அளவு கால் படி அல்லது உழக்கு என்றும் சொல்லப்படும்.

2-வது அளவால் மணலை அளந்து பெரிய படியில் போடு. இப்படி எத்தனை முறை போட்டால் பெரிய படி நிறையும்? 2 முறை போட்டால் நிறையும். ஆதலால் பெரிய படியில் இது பாதி, அல்லது அரைப்படி என்று தெரிகிறது.

மூன்றுவது அளவு படியால் மணலை அளந்து முதலாவது படியில் கொட்டு. பெரிய படி நிறைய எத்தனைதடவை கொட்டவேண்டும்? நான்கு தடவை களல்லவா? ஆதலால் இது ஒரு படியில் நான்கில் ஒரு பங்கு ஆகும். இது கால்படி எனப்படும்.

இதே சிறிய அளவு படியைக் கொண்டு மணலை அளந்து அரைப் படியில் கொட்டு. இப்படி எத்தனை

தடவை கொட்டினுல் படி நிறம்பும். 2 தடவை போட்டால் நிறையும். ஆதலால் இது அரைப்படியில் பாதி.

2 கால் படி	=	1 அரைப் படி
2 உழக்கு	=	1 உரி
2 அரைப்படி	=	1 படி
2 உரி	=	1 படி
4 கால் படி	=	1 படி
4 உழக்கு	=	1 படி

அப்பியாசம் 1

1. 1 படிக்கு எத்தனை அரைப்படி?
2. உரி எத்தனை கொண்டது 1 படி?
3. உரியில் எத்தனை உழக்கு?
4. உழக்கு எத்தனை கொண்டது 1 படி?
5. 2 உழக்கு எவ்வளவு படி?
6. 2 படிக்கு எத்தனை உழக்கு?
7. $1\frac{1}{2}$ படியில் உரி எத்தனை?
8. படி 2-ல் உழக்கு எத்தனை?

9. 3 படியில் எத்தனை உரி ?

10. எத்தனை உரி கொண்டது 2 படி 2 உழக்கு ?

அப்பியாசம் 2

1. 1 படி அரிசியுடன் $\frac{1}{4}$ படி அரிசியை கலந்தால், மொத்தம் எத்தனை படி அரிசியாகும் ?

2. காலையில் 1 படி அரிசியும், மாலையில் $\frac{1}{2}$ படி அரிசியும் சமையல் செய்தால், தினசரி மொத்தம் எவ்வளவு அரிசி செலவாகும் ?

3. 2 படி பாலுடன் 4 உழக்குத் தண்ணீரைச் சேர்த்தால் மொத்தம் எத்தனைபடி பால் ?

4. 3 படி தேங்காயெண்ணெயில் பட்சணம் செய்த பின் உழக்கு எண்ணெய் மீதி யிருந்தால், செலவானது எவ்வளவு ?

5. ஒருவனிடம் 4 படி 2 உழக்கு நல்லெண்ணெய் இருக்கிறது. அவனுக்கு 5 படி எண்ணெய் தேவை. இத்துடன் இன்னும் எவ்வளவு எண்ணெய் சேர்த்தால் 5 படி ஆகும் ?

6. ஒரு செப்புப் பானை 6 படி தண்ணீர் பிடிக்கும். அதில் 5 படி 2 உழக்கு தண்ணீர் இருக்கிறது. இத்துடன் இன்னும் எவ்வளவு தண்ணீர் ஊற்றினல் குடம் நிறையும் ?

7. ஒரு புட்டியில் $\frac{1}{4}$ படி சர்பத் இருந்தால் 4 புட்டிகளில் மொத்தம் எவ்வளவு சர்பத் இருக்கும் ?

8. ஒரு பாத்திரத்தில் 2 படி பால் இருக்கிறது. இதை 4 பாத்திரங்களில் சமமாய்ப் பங்கு வைத்தால் ஒவ்வொரு பாத்திரத்திலும் உள்ள பால் எவ்வளவு?

பயிற்சி

சாதனங்கள் :—ஒரு வாளி மணல், ஒரு பெட்டி தானியம், ஒரு குடம் தண்ணீர்.

1. 1 படி அளவால் பெட்டியிலுள்ள மணலை அளந்து பார். மணல் எத்தனை படி?

2. அரைப்படி அளவால் குடத்திலுள்ள தண்ணீரை அளந்து பார். குடம் எத்தனை படி பிடிக்கும்?

3. ஒரு வாளி நெல்லை படியாலும், $\frac{1}{2}$ படியாலும் அளந்து பார். $\frac{1}{2}$ படியால் அளந்தால் எத்தனை தடவை அதிகம் அளக்கவேண்டும்?

4. ஒரு 1-படிச் செம்பில் உள்ள பாலை நான்கு பேர்களுக்குச் சமமாகப் பங்கிடு. நீ உபயோகிக்கும் அளவின் பெயர் என்ன?

அத்தியாயம் 8

இந்திய நாணயம்

நமது நாட்டில் வழங்கும் நாணயங்களுக்கு இந்திய நாணயம் என்று பெயர்.

குறிப்பு :—நாணயங்களைக் கற்பிக்க உபாத்தியாயர் அட்டை நாணயங்களை பையன்களுக்கு நேரில் காண்பிக்கவும். அல்லது இந்த நாணயங்களை பிரத்தியக்ஷமாய் அவர்களிடம் காண்பிப்பது மிகவும் நலம்.

3 பை = 1 காலணா
6 பை = 1 அரையணா
12 பை = 1 அணா

2 காலணா = 1 அரையணா
2 அரையணா = 1 அணா
4 காலணா = 1 அணா

16 அணா = 1 ரூபாய்

4 பை = 1 துட்டு
3 துட்டு = 1 அணா

குறிப்பு:—பைசா சல்லி யென்றும், காசு என்றும், தம்படி என்றும் சொல்லப்படும்.

அப்பியாசம் 1

1. அணாவுக்கு எத்தனை பை, காலணா, அரையணா, துட்டு?
2. ஒரு காலணாவுக்கு எத்தனை தம்படி?
3. ஒரு துட்டுக்கு எத்தனை பைசா?
4. ஒரு அணாவுக்கு எத்தனை துட்டு?
5. ஒரு அணாவுக்கு எத்தனை காலணா?
6. ஒரு ரூபாய்க்கு எத்தனை அணா?
7. ஒரு அணாவுக்கு எத்தனை அரையணா?

நாணயங்கள்

பை

காலணா

அணா



இரண்டணா

ரூபாய்



அப்பியாசம் 2

1. ஒரு பிச்சைக்காரனுக்கு 1 பையாக 12 பிச்சைக்காரர்களுக்குக் கொடுக்க எவ்வளவு பணம் வேண்டும்?

2. 1 முறுக்கு 1 பையாக காலணுவுக்கு எத்தனை முறுக்கு?

3. 1 வடை 1 பை விலை. 4 வடை விலை என்ன?

4. 1 பழம் காலணு விலை. 1 அணுவுக்கு எத்தனை பழம்?

5. ஒரு பென்சில் அரையணு. 2 பென்சில்கள் விலையென்ன?

6. ஒரு ஆரஞ்சிப்பழம் 1 அணு விலை. 1 ரூபாய்க்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்?

7. வாழையிலை அடுக்கு ஒரு துட்டு. 3 அடுக்கு விலை என்ன?

8. அரையணுவை இரண்டு பேருக்குச் சமமாகப் பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு?

9. கற்கண்டு காலணு, மிட்டாய் ஒரு தம்படி. இரண்டும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

10. காலணு காகிதம், காலணு மையுருண்டை, அரையணு பென்சில் இவைகள் வாங்கப் பணம் எவ்வளவு தேவை?

11. 2 அடுக்கு இலை அரையணு விலை. ஒரு அடுக்கு விலை என்ன?

12. என்னிடம் 1 அணு இருந்தது. 1 துட்டுக்குத் தேங்காயும், ஒரு துட்டுக்குப் பழமும் வாங்கினல், என்னிடம் எவ்வளவு மீதி ?

13. ஒரு ரூபாயை 16 பேர்களுக்குச் சமமாய்ப் பங்கிட்டுக் கொடுத்தால், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும் ?

பரிசோதனைக் கணக்குகள்

(1)

கூட்டு :

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
14	44	21	12	22	17	45
25	23	34	31	23	20	31
32	10	33	25	42	42	13
—	—	—	—	—	—	—
—	—	—	—	—	—	—

கூட்டு :

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
12	13	11	10	21	32	23
31	21	22	23	32	22	21
42	30	20	12	12	12	24
14	33	34	44	23	13	10
—	—	—	—	—	—	—
—	—	—	—	—	—	—

(2)

கீழுள்ள கணக்குகளைக் கூட்டிப்பார். சரி என்றால் √ போடு. தப்பிதம் என்றால் × போடு.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17	9	15	38	13	3
25	14	9	17	22	22
19	19	15	15	15	31
25	13	18	24	25	35
81	55	59	94	75	91

(3)

1. கீழ்வரும் கணக்குகளில் கோடிட்ட இடத்தில் எத்தனை பத்து என்று எழுது.

33 என்பது 3 ஒன்றும்—பத்தும்.

26 என்பது 6 ஒன்றும்—பத்தும்.

45 என்பது 5 ஒன்றும்—பத்தும்.

71 என்பது 1 ஒன்றும்—பத்தும்.

92 என்பது 2 ஒன்றும்—பத்தும்.

59 என்பது 9 ஒன்றும்—பத்தும்.

88 என்பது 8 ஒன்றும்—பத்தும்.

2. இக்கணக்கைப் பலகையில் எழுதிக் கூட்டு.

ப.	ஒ.
1	9
1	6
2	8
1	2

1. ஒன்றுகளைக் கூட்டினால் வரும் எண் என்ன?

2. ஒன்றுகளின் கீழ் எந்த எண்ணை எழுதுவாய்? 1, 2, 1, 1 உடன் எதைக் கூட்டுவாய்.

3. விடையை எழுது.

(4)

1. 1-லிருந்து ஆரம்பித்து 2-களாக 61 வரை எழுது.

2. 2-லிருந்து ஆரம்பித்து 3-களாக 77 வரை எழுது.

3. 1-லிருந்து ஆரம்பித்து 8-களாக 81 வரை எழுது.

4. 1-லிருந்து ஆரம்பித்து 9-களாக 91 வரை எழுது.

5. 2-லிருந்து ஆரம்பித்து 6-களாக 62 வரை எழுது.

6. 2-லிருந்து ஆரம்பித்து 7-களாக 58 வரை எழுது.

7. 2-லிருந்து ஆரம்பித்து 8-களாக 82 வரை எழுது.

8. 2-லிருந்து ஆரம்பித்து 9-களாக 92 வரை எழுது.

9. 3, 10, 17 என்று ஆரம்பித்து 80 வரை எழுது.

10. 3, 11, 19 என்று ஆரம்பித்து 91 வரை எழுது.

11. 6, 12, 18 என்று ஆரம்பித்து 78 வரை எழுது.

12. 9, 15, 21 என்று ஆரம்பித்து 69 வரை எழுது.

(5)

1. சரோஜாவிடம் 93 அங்குலம் நீளமுள்ள நாடா இருக்கிறது. அதில் 42 அங். நீளம் கத்தரித்து விட்டாள். மீதி நாடாவின் நீளமென்ன?

2. ஒரு விருந்துக்கு 98 ஜாங்கரிகள் வருத்தி யிருந்தேன். அதில் 17 மீதியிருந்தது. செலவழிந்தது எத்தனை?

3. சுலோசனு பட்டணம் போவதற்காக ரூபாய் 83 வைத்திருந்தாள். ஆனல் அவளுக்கு 97 ரூபாய் தேவை. இன்னும் எவ்வளவு ரூபாய் வேண்டும்?

4. ஒரு கூடையிலுள்ள 74 ஆரஞ்சிப்பழங்களில் 13 கெட்டுப்போயின. நல்ல பழங்கள் எத்தனை?

5. ஒரு தந்தித்தூணின் உயரம் 32 அடி. அது கீழே விழுந்து ஒடிந்துபோயிற்று. ஒரு பாகத்தின் நீளம் 12 அடி. மற்ற பாகத்தின் நீளமென்ன?

6. ஒரு பஜனையிலுள்ள மொத்த ஆட்கள் 74. அவர்களில் பாடத்தெரிந்தவர்கள் 43 பேர். பாடத் தெரியாதவர்கள் எத்தனை பேர் ?

(6)

காலி இடங்களில் தகுந்த எண்களை எழுது.

1.	$4 \times 10 = —$	6.	$2 \times 10 = —$
2.	$5 \times — = 50$	7.	$— \times 10 = 10$
3.	$— \times 10 = 90$	8.	$3 \times 10 = —$
4.	$7 \times — = 70$	9.	$8 \times — = 80$
5.	$6 \times 10 = —$	10.	$10 \times 10 = —$

(7)

காலி இடங்களைப் பூர்த்திசெய்.

1.	$6 \times 5 = —$	6.	$2 \times — = 10$
2.	$3 \times 5 = —$	7.	$— \times 5 = 5$
3.	$8 \times 5 = —$	8.	$— \times 5 = 45$
4.	$4 \times — = 20$	9.	$5 \times — = 50$
5.	$7 \times — = 35$	10.	$5 \times — = 25$

(8)

கீழே புள்ளியிட்ட இடங்களில் இருக்க வேண்டிய எண்களை எழுது.

1. ஐந்து 2 கள் = ...
2. மூன்று 2 கள் = ...
3. ஏழு 2 கள் = ...
4. ஒன்பது 2 கள் = ...
5. ஆறு 2 கள் = ...
6. நான்கு 2 கள் = ...

7. இரண்டு 2 கள் = ...
8. எட்டு 2 கள் = ...
9. பத்து 2 கள் = ...

(9)

விட்டுப்போன எண்களை எழுது :—

8 × 2 = —
7 × — = 14
3 × — = 6
5 × 2 = —
4 × — = 8
— × 2 = 12
— × 2 = 18
10 × — = 20
1 × — = 2
2 × — = 4

(10)

எப்படிக் கூட்டினாலும் ஒரே எண்.

1. எப்படிக் கூட்டினாலும் 18.

5	10	3	=
4	6	8	=
9	2	7	=

1. மேலிருந்து கீழாக ஒவ்வொரு வரிசையையும் கூட்டு. மொத்தம் என்ன ?

2. இடதுபக்கமிருந்து வலதுபக்கமாக ஒவ்வொரு வரிசையையும் கூட்டு மொத்தம் என்ன ?

3. மூலைவாக்காகக் கூட்டு. மொத்தம் என்ன ?

குறிப்பு:—எந்தவிதமாகக் கூட்டினாலும் மொத்தம் 18 வருவதைக் கவனி.

2. இதுபோன்ற 9 கட்டங்கள் அமைத்து அவைகளில் எப்படிக் கூட்டினாலும் மொத்தம் 15, 21, 24 வரும்படி எண்களை அமைக்கவும்.

The Jupiter Press, Madras.